ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்பதையும் இரங்கற் குறிப்புகளோடு இணைத்துக் கொள்ளலாம்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

9–15 மணி

3. இரங்கல் தீர்மானங்கள்.

(அ) முன்னாள் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவையின் முன்னாள் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் 1–7–1991 அன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மறைவுக்கு இரங்கலைத் தெரிவிக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

''1962–67, 1967–71, 1971–76 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், இப்பேரவையின் துணைத் தலைவராகவும், பின்னர் பேரவையின் தலைவராகவும் திகழ்ந்து, அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றி, பலரின் பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் பெற்று, நல்ல பல தமிழ் நூல்களையும் எழுதி, பெயரோடும், புகழோடும் திகழ்ந்தவராகிய புலவர் கோவிந்தன் அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெருவருத்தம் கொள்வதோடு, அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார்க்கும் இப்பேரவை தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது''.

இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)